பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
## VALAMPURI

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
பி. எஸ். ரி. ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்: செ. திருப்பதி
பாடசாலை வீதி,
திருநெல்வேலி.
லாலாசோப் அச்சுவேலி
(கி 1045)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 08 வியாழக்கிழமை (23-11-2000) தொ. பேசி 3378 ஒலி: 339

## இலங்கைஅரசும்; தமிழீழவிடுதலைப்புலிகளும் இராணுவரீதியில் ஒருபோதும்வெல்லமுடியாது

### பிரிட்டிஷ்வெளியுறவுஅமைச்சர்தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையரசின் ஒற்றையாட்சிக் கோட்பாடும் விடுதலைப் புலிகளின் சுயாட்சி இறைமை என்ற கோரிக்கையும் அடையக்கூடியவை. யுத்தம் நிறுத்தப்பட்டு பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படலாமென பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெயின் நேற்று உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சில் மண்டபத்தில் ''மாற்றங்களின் ஊடாகசமாதானம்'' என்ற தலைப்பில் அமைச்சர் பீற்றர் ஹெயின் உரையாற்றினார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இராணுவ ரீதியில் ஒருபோதும் (8-ம்பக்கம் பார்க்க)

## அனுமதி அட்டை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகள், கல்வி வலயப் பணிமனைகளூடாக, பாடசாலைகளுக்கு அனுப்பப் பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஏ.எம் ஆர் வி அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பரீட்சார்த்திகள் தமது பரீட்சை அனுமதி அட்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# பண்டாரவளை, நிமலராஜன் படுகொலைகளைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

## அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

(நமது நிருபர்)

**பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற மனித நேயமற்ற படுகொலைகளையும், பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலையையும் கண்டித்து யாழ். பல்கலைக் கழக மாணவர்களினால் நேற்றுக்காலை 10-30 மணிக்கு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.**

**இந்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டார்கள் ஊர்வலத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கான மகஜர் ஒன்றை யாழ். அரச அதிபரிடம் மாணவர்கள் கையளித்தனர்.**

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம்யாழ். பல்கலைக் கழகத்தில் இருந்து ஆரம்பமாகி பலாலி வீதி வழியாக கந்தர்மடம்சந்தியை அடைந்து அங்கிருந்துஆனைப் பந்திஊடாககச்சேரி நல்லூர் வீதி வழியாக யாழ். செயலகத்தைச் சென்றடைந்தது.

ஊர்வலத்தின் போதுஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பியவாறும்,

→ 8ஆம் பக்கம் பார்க்க

## 3500மாலை அணிவித்து அதிபருக்கு பிரியாவிடை

(மட்டக்களப்பு)

கல்லூரி ஒன்றின் பிரதி அதிபரின் பிரிவுபசாரத்தின்போது ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இணைந்து 3500 பூமாலைகளை பிரதியதிபருக்கு அணிவித்த வியப்பூட்டும் நிகழ்வு அண்மையில் கல்முனை கல்லூரியில் இடம்பெற்றுள்ளது.

கல்முனை ஹாமல் பார்த்திமா தேசிய கல்லூரியின் பிரதியதிபர்வே கிருஷ்ணபிள்ளையேமூவாயிரத்து ஐந்நூறு மாலைகளைப் பெற்ற பெருமைக்குரியவராவார்.

இருபத்தொன்பதுவருடங்களாக அதேபாடசாலையில் ஆசிரியராக, பிரதியதிபராக (8-ம்பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டத்தில் ஒலித்த கோசங்கள்

(யாழ்ப்பாணம்)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமையையும், பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டமையையும் கண்டித்தும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் யாழ்.நகரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட

→ 8ஆம் பக்கம் பார்க்க

## தமிழரின்ஏகப்பிரதிநிதிகள் புலிகளே பிரி.அமைச்சரிடம் காங்கிரஸ் எம்.பி.

[கொழும்பு]

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெய்ன் தமிழ்க் கட்சி தலைவர்களை தனியான முறையில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் இல்லத்தில் நேற்று மாலை இச்சந்திப்பு இடம் பெற்றது.

இச் சந்திப்பில் தமிழர் விடுதலைக்கூட்டணிசார்பில்ஆர். சம்பந்தன், ஜோசப்பரராஜசிங்கம், ஈ.பி.டி.பி சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விக்கினேஸ்வரன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் அ.விநாயகமூர்த்தி செயலாளர் கலாநிதி எம் குமர குருபரன் ஆகி

→ 8ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்கஉதவிசெயலர் கொழும்பு வருவார்!

(கொழும்பு)

அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் ஹோல் என்ரபேட் எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

தெற்காசிய விவகாரங்களை ஆராயும் பொருட்டு வரும் இவர் அதற்கு முன் இந்தியா, பாகிஸ்தான், பூட்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

[வவுனியா]

தென்மராட்சி கனகம் புளியடியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே இடம் பெற்ற மோதலில் 5 புலிகள் உயிரிழந்துள்ளதாக புலிகள் அறி

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பிரதி அமைச்சர் லயனல் நேற்று காலமானார்!

(கொழும்பு)

சுகாதார பிரதியமைச்சர் லயனல்குணவர்த்தனாநேற்று காலை மாரடைப்பினால் மருத்துவமனையில் மரணமானார்.

பல்கலை பகுதியில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த வேளையிலேயே இத்திடீர் சுகயீனம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டி.செய்ஸா மகப்பேற்று

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டிஷ்வெளிவிவகாரஅமைச்சர் விடுதலை புலிகளுடன் பேசுவதா? சிஹல உறுமய ஆர்ப்பாட்டம்!

[கொழும்பு]

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெயின் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தக் கூடாதெனக் கோரி இனவாதக் கட்சிகளில் ஒன்றான சிஹலஉறுமய நேற்று மாலை ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் விமான மூலம் கொழும்பு வந்த ஹெயின் கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் அலுவலகத்தில் விஷேட உரை ஒன்றினை நிகழ்த்துவதற்கு சென்ற போதே இவ்

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இராசி பலன்

23-11-2000
(கார்த்திகை 8, வியாழன்)
திரியோதசி பி இ 4.39 வரை
சித்திரை பி ப 3 39 வரை
ராகுகாலம் 1.41 -3 11
சுபநேரம் 7.41-9.11
சித்தாமிர்தம பிரதோச
விரதம்

**மேடம்**
மபாசன சுகம், தனவரவு, வாகன வசதி, கௌரவம், அரசநன்மைக்கு உறவு.

**இடபம்**
நோய்குணமடைதல், எதிரிகள விலகுவர், முயற்சி விருத்தி, காரிய நனமை.

**மிதுனம்**
குடும்பக் கவலை, சிறு வியாதி, பிரயாண இடையூறு, காரிய அனுகூலம்.

**கடகம்**
சுகக்குறைவு, பயந்த சுபாவம், தனனம்பிக்கைக்குறைவு ரோகம், காரியத் தாமதம்.

**சிங்கம்**
நினைத்த காரியம் நிறைவேறும். தனவரவு, இனிய நி... பிரயாணம.

**கன்னி**
வாக்குக் கலகம், பொருள் விரயம், மதிப்புக் குறைதல், காரியநன்மை.

**துலாம்**
தெய்வசிந்தை, ஆரோக்கியம், சயன சுகம், புதிய பொருள் சேர்க்கை, பிரயாணம்.

**விருச்சிகம்**
பிரயாணம், சுபசெலவு, காரிய தாமதம், கோபப்படுதல் சயன சுகக்குறை.

**தனுசு**
மனமகிழ்ச்சி, நண்பர்கள் உதவி, கீர்த்தி, தனவரவு.

**மகரம்**
தொழில் அதிகாரம், அதிகாரிகள் சந்திப்பு, முயற்சி பலிதம் எதிர்பாரா தநன்மை.

**கும்பம்**
பிரயாணம், தேவையற்ற அச்சம், கட்டுப்படுதல், காரிய ஜெயம்.

**மீனம்**
வீண் பிரச்சினை, கடன் தொல்லை, நிலைமாற்றம், வியாதி.

(பழையநோப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

---

சமூக புனரமைப்புப் பணியில்

# முழுமையாக ஈடுபட்டோர்

# பாராட்டப்பட வேண்டியோர்

## கோப்பாய் கலையரங்கில் தெரிவிப்பு

(கோப்பாய்)

செய்யும் தொழிலே தெய்வம் என்ற மனப்பாங்குடன் திரிகரண சுத்தியுடன், சமூக புனரமைப்புப் போராட்டத் தளபதிகளாக செயற்படுவதன் மூலமே சமூக மறுமலர்ச்சி சாத்தியமாகும் என்பதை உணர்ந்துகிட்டத்தட்ட 30 வருடங்கள் வரையில் ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றி ஒய்வுபெற்ற இவர்கட்கே இன்று எமது கோட்ட அதிபர்களால் சேவை நலன் பாராட்டப்படுகின்றதென கோப்பாய்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் கோப்பாய்கிறிஸ்தவக் கல்லூரியின் கலையரங்கத்தில் நடைபெற்ற வைபவத்தில் தெரிவித்தார்.

ஒய்வு பெற்ற அதிபர்களான கே. இராசகோபாலு, எஸ். முத்துக்குமாரசாமி, கே. தங்கவேல், பி நடேசன், திருமதி நவரட்ணம் அருட்சகோதரி எத்தர்வீவா ஆகியோருக்கு நடத்தப்பட்ட விழாவில் தொடர்ந்தும் தலைமை வகித்துப் பேசிய கோட்டக் கல்விப்பணிப்பாளர்; இவர்கள் எழுத்தறிவிப்பவன் இறைவன் என்ற நிலையிலிருந்து கல்விச் சூழல் திட்ட வல்லுநராக, ஒழுங்கமைப்பாளர்களாக முகாமையாளராக, வழிகாட்டியாக, ஆலோசகர்களாக, மாணவர்களின் முழு விருத்திக்கும் பொறுப்புள்ளவர்களாக விளங்கியுள்ளனர் என்றார்

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் உரையாற்றுகையில்; அறிவாற்றலும், அர்ப்பணிப்பும் மிக்கவர்களேஇவர்கள்தொழிலுக்கு அருகதையானவர் அவர்களே உயர்தொழிலில் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற நடத்தையினை மேற்கொண்டு சமூகத்தின் வழிகாட்டிகளாக வாக்கும் வாழ்வும் ஒன்றாகச் செயற்பட்டு சமூக ஒளியாகவும், தோணியாகவும் அரும்பணி ஆற்றக் காணலாம் என்பதற்கொப்ப இவர்கள் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளனர் என்றார்.

பதிலுரை ஆற்றிய ஓய்வு பெற்ற நடராஜ லிங்க வித்தியாலய அதிபர் எஸ். முத்துக்குமாரசாமி தமது பதிலுரையில் தமது சேவையின் மகத்துவத்துக்கு பழைய மாணவர் சங்கத்தால் தமக்கு அணிந்து கௌரவிக்கப்பட்ட தங்கச்சங்கிலேயே எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. [க-79]

---

## நாளை பிரதிநிதிகள் கூட்டம

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [செ-75]

---

## சுஸந்திகா ஜெயசிங்கவிற்கு 50 லட்சம்ரூபா அன்பளிப்பு!

சிட்னி ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் பெற்று சாதனைபடைத்த இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுஸந்திகா ஜெயசிங்கவிற்கு 50 லட்சம் ரூபா நன்கொடையாக வழங்கப்படவுள்ளது.

விளையாட்டுத் துறையமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல ஜனாதிபதி சந்திரிகாவுடன், நடத்திய பேச்சுக்களை அடுத்து அவர் இந்தப் பணத்தை வெகுவிரைவில் பெறவுள்ளார்.

இதேவேளை சுஸந்திகாவின் வெற்றிக்கு அண்மையில் 58 லச்சம் ரூபா பெறுமதியான கார் ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. (ஸ்ரீ)

---

கரணவாயில்

## கசிப்பு உற்பத்தி பொதுமக்கள் சிரமம்

(நெல்லியடி)

கரணவாய் அண்ணாசிலையடி பகுதியில் கசிப்பு உற்பத்தி மேற்கொண்டு வரும் ஒருசிலரால் அப்பகுதியில் வசிக்கும் அனைவரும் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

இப்பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈபடுவோரை இனம் கண்டு, உரிய சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், விடாப்பிடியாக இவ் இழிதொழிலில் ஈபடுட்டு வருபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (உ-27)

---

## ஒன்றை விட்டுஒருநாளைக்கு மின்சாரவெட்டு அமுலாகும்

அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தினசரி ஏதாவது ஒரு பகுதிக்கு மின்சாரவெட்டு அமுல் படுத்தப்பட வேண்டிய சூழ்நிலை தற்சமயம் நிலவுவதாக மின்சார சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் ஒன்றை விட்டு ஒரு நாளைக்கு இம் மின்சாரவெட்டுஇடம்பெறும் என்றும் எனினும்இயலுமான வரை சகலருக்கும் மின்சாரம் வழங்குவதற்ககன நடவடிக்கையில் சபை ஈடுபட்டுவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மின் உற்பத்தி போதாமையே இவ்வாறு மின்வெட்டுஅமுல்படுத்த வேண்டி உள்ளதாகவும்எனினும் நிலைமை சீரடைந்ததும் மின்சார விநியோகம் சீராகும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளையில் கொக்குவில் கிழக்கின் சில பகுதிகளில் ஒழுங்காக மின்சார வழங்கப்படுகிறது என்ற செய்தியையும் அவர் முற்றாக மறுத்துள்ளார் [க]

---



## பிரிவுத் துயர் பகிர்வு

### திருமதி பொன்னம்பலம் வள்ளிப்பிள்ளை

வாரிவளவு காரைநகரைப்பிறப்பிடமாக கொண்டவரும் தட்டாதெருச் சந்தி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்டவருமாகிய பொன்னம்பலம் வள்ளிப்பிள்ளை 22.11.2000 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10 00மணியளவில்கோம்பயன் மணல்மயானத்தில் நடைபெறும்.

தகவல்; பொ. சிவப்பிரகாசம் (மகன்)

### அருள்பிரதாசன் முரளிதரன்

பருத்தித்துறையைச் சேர்ந்த அருள்பிரதாசன் முரளிதரன் 20.11.2000 அன்று அகாலமரணமானார்.

தகனக்கிரியைகள் 22.11.2000 நேற்று நடைபெற்றது.

தகவல்: ஆ. பாலச்சந்திரன் (மாமன்)

### சின்னப்பு நாகலிங்கம்

புன்னாலைக் கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னப்பு நாகலிங்கம் 20.11.2000 அன்று திருமலையில் அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்: குமாரசாமி சண்முகநாதன்.

### வைரமுத்து செல்லமுத்தர்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து செல்லமுத்தர் 21.11.2000 அன்று காலமானார்.

தகனக்கிரியைகள் நேற்று நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

தகவல்: பொ கிருஸ்ணகுமார் (மருமகன்)

### ஆறுமுகம் சுப்பையா

(ஓய்வு பெற்ற உப அதிபர், பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம்)

மூளாய் தெற்கு, ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் சுப்பையா 21.11.2000 அன்று புத்தளத்தில் காலமானார்.

இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்: சி. சிவதட்சணாமூர்த்தி (மருமகன்)

### பிரம்மஸ்ரீ பஞ்சாட்சர குருக்கள்

(தாவடி பத்திரகாளி அம்மன் கோவில் உரிமையாளர்)

தாவடியை பிறப்பிடமாகக் கொண்ட பிரம்மஸ்ரீ பஞ்சாட்சர குருக்கள் 20.11.2000 அன்று கொழும்பில் சிவபதமெய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று கொழும்பில் நடைபெற்றது.

தகவல்: மனைவி, மக்கள்



---



## நல்லூர் பிரதேச சபை - திருநெல்வேலி

# மீள் கேள்வி அறிவித்தல்-2001

கேள்விப்பத்திர விநியோகம் 28-11-2000ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை. கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதியும் நேரமும் 29-11-2000 திகதி நண்பகல் 12-00 மணி வரை. கேள்வி திறக்கும் திகதியும் நேரமும் 29-11-2000ம் திகதி பிற்பகல் 3-00 மணி. கோண்டாவில் பலாலி வீதி, ஆட்டிறைச்சிக்கடை, கோயில் கோட்டம் மாட்டிறைச்சிக்கடை ஆகியவற்றிற்கு விண்ணப்பிப்பவர்கள் தாங்களாகவே இடத்தைத்தெரிவுசெய்து கிராமசேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட காணி உரிமையாளரின் சம்மதக்கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும். கோண்டாவில் பலாலி வீதி. ஆட்டிறைச்சிக் கடைக்கான இடம் கோண்டாவில் சந்திக்கும் டிப்போவுக்கும் இடையில் இருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

| இறைச்சிக் கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த தொகை |
|---|---|---|---|
| **நல்லூர் உப - அலுவலகம்** | | | |
| 01. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல: 1 | 350-00 | 3000-00 | 45,150-00 |
| **கொக்குவில் உப - அலுவலகம்** | | | |
| 01. கொக்குவில் உப-அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 350-00 | 3000 00 | 40,000-00 |
| 02. கோண்டாவில் பலாலி வீதி, ஆட்டிறைச்சிக்கடை | 350-00 | 3000-00 | 58,800-00 |
| 03. கோயில் கோட்டம் மாட்டிறைச்சிக் கடை | 350-00 | 3000-00 | 15,000-00 |

க. மணிபல்லவராஜன்,
(ஜே. பி. யூ. எம்)
தலைவர்
நல்லூர் பிரதேச சபை

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
15-11-2000

(கி/1052)

# துன்பங்களின் மத்தியில் யாழ். மக்கள்

# மூடி மறைக்கும் முயற்சியில் அதிகாரிகள்

## இணையத் தலைவர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல்வேறு விதமான கஷ்டங்கள் துன்பங்களுக்கு மத்தியில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் வேளையில் மக்களுடைய யதார்த்தமான பிரச்சினைகள் தீர்க்கப்படாமல், திட்டமிட்டு அரச அதிகாரிகளால் மூடி மறைக்கப்பட்டு வருகின்றன. இதனால் மக்களுடைய உண்மையான பிரச்சினைகள் மற்றும் தேவைகளை உரியவாறு இனங்கண்டு சரியான தரவுகளுடன் வெளிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகவுள்ளது. இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் இப்பாரிய பணியில் இருந்து விலகியிருக்க முடியாது.

இவ்வாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின்யாழ். கிளையில் திங்கட்கிழமை இடம்பெற்ற யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றிய இணையத் தலைவர் பொ. விக்கினேஸ்வரன்குறிப்பிட்டார்.

இணைய அங்கத்துவ நிறுவனப்பிரதி நிதிகள் பங்கு கொண்டிருந்த இக்கூட்டத்தில் பொ. விக்கினேஸ்வரன் தொடர்ந்து உரையாற்றுகையில்;

யாழ்ப்பாணக் குடாநாட்டில் செயற்பட்டு வந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் செயல்பாடுகளில் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தவும், இரட்டிப்புத் தன்மையான பணகளைச் செய்யாமல் இருக்கவும் உதவும்பொருட்டு 1990 ஆம்ஆண்டில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

முதல் ஐந்துஆண்டுகளிலும் இணையத்தின் செயல்பாடுகள் மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்ததுடன், அவற்றின் மூலம் மக்களும் நல்ல பயன்களைப் பெற்று வந்தனர். அது மட்டுமல்லாமல் அரச நிர்வாகமும் இணையத்துடனும் அரச சாரபற்ற நிறுவனங்களுடனும் நல்ல புரிந்துணர்வுக் கொள்கையுடன் இயங்கிவந்தன.

ஆயினும் 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வினைத் தொடர்ந்து மேற் கூறப்பட்ட உறவு நிலையில் பாரிய இடைவெளி தோன்றியது. யாழ். குடா நாட்டில் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயல்பாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டன. இந்த நிலமையானது அரசின் கொள்கையாக இருக்கவில்லை. இருப்பினும் யாழ். மாவட்டத்தில் இயங்கும் அரச அதிகாரிகளின் நிலைப்பாடாக இருந்துள்ளது.

குடாநாட்டில் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டு வந்த உச்சகட்ட செல்வாக்கினைக் குறைக்கும் வகையில் அரச அதிகாரிகள் செயல்பட்டு வந்துள்ளனர். அரசின் வேலைத் திட்டங்களைச் செய்ய வேண்டிய நிலையில் இருந்த அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் போல் செயல்பட்டனர்.

அத்தகைய அரச அதிகாரிகளின் நிலைப்பாட்டினை மக்கள் நன்கு உணரத் தொடங்கியுள்ளனர். 1996 ஆம் ஆண்டின் பின் பல நூறு திட்டங்கள் மூலம் பல கோடி ரூபாய் நிதி குட நாட்டில் செலவழிக்கப்பட்டு விட்டன. ஆயினும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் இன்னமும் தீரவில்லை. இதற்கான அடிப்படைக் காரணங்களை நாம் நன்கு ஆராய வேண்டும். அரசுக்கு ஆமாம் போடுபவர்களாக நாம் இருக்க முடியாது எனக்குறிப்பிட்டார்.

(க-77)

## தபால்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டுக்கான ஒரு தொகுதி வெளியூர்த் தபால் பொதிகள் நேற்றைய செஞ்சிலுவைக் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவை இன்று அல்லதுநாளை தரம் பிரித்து விநியோகிக்கப் படுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[க-3]

## கரணவாயில் சுற்றிவளைப்பு

(கரணவாய்)

கரணவாய் குஞ்சர்கடைப் பகுதி மற்றும் கரணவாய் மத்தி ஆகிய பகுதிகள் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் சுற்றிவளைக்கப்பட்டு வீடு வீடாகத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

வீடுகளிலிருந்த குறிப்பிட்ட வயதுக்குட்பட்டோர் அழைந்துச் செல்லப்பட்டு குஞ்சர் கடைச்சந்தியிலுள்ள சோதனைச் சாவடியில் வைத்து அவர்களின் அடையாளஅட்டை, பாஸ் என்பன பரிசீலிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

சிலமணிநேர இடைவெளியின் பின்னர் நிலைமை வழமைக்கு திரும்பிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(ச-27)

## சுன்னாகத்தில்அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதம்

### பிரதேச சபை தெரிவிப்பு

(ஈச்சமோட்டை)

வலிகாமம் தெற்கு சுன்னாகப் பகுதியை அபிவிருத்தி செய்வதற்கான துரித ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவலிகாமம் தெற்குப் பிரதேச சபை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதன்படி 10 இலட்சம் ரூபா செலவில் 9 புதியதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாகவும் அதற்கான ஆயத்த நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் பிரதான அம்சங்களாக வீதி அபிவிருத்தி, மயானம் புனரமைப்பு மற்றும் குழாய்க்கிணறு அமைத்தல் போன்றன மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தெரியவருகிறது.

(ச-59)

## இரத்ததானம்

யாழ். தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள்கடந்த வாரம்இரததானம்வழங்கினர்

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பாளர்கள்கல்லூரிக்குச் சென்று இரத்தத்தைப் பெற்றுக் கொண்டனர்.

(ச-106)

## நீர்த்தாங்கிப் படகு எழுவைதீவில் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

எழுவைதிவு மக்களின் குடிநீர் பிரச்சினையை நீக்கும்முகமாக நீர் தாங்கிப்படகு ஒன்று அப்பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வைபவரீதியாக இச்சேவை ஆரம்பிக்கப்பட்ட போது நல்லூர் பிரதேசசபை தலைவர் க. மணிபல்லவராஜன் ஊர்காவற்றுறை பிரதேச சபை உறுப்பினர் அன்ரனி ராஜா (ஈசன்) விடம் படகை ஒப்படைத்து சேவையை ஆரம்பித்து வைத்தார்.

இவ்வைபவத்தில் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் கலந்துகொண்டார்.

5 இலட்சம்ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட மேற்படி படகுமூலம் ஊர்காவற்றுறையிலிருந்து எழுவைதீவிற்கு குடிதண்ணீர் வழங்கும் பணியை ஆரம்பித்ததன் மூலம் அப்பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. (க-3)

## தமிழில் பேசுவதைத்தரக் குறைவாக கருதும் தென்பகுதி தமிழர்கள்

### முன்னாள் கல்விப் பணிப்பாளர் ஆதங்கம்

(தென்மராட்சி)

உலகின் பல பாகங்களிலும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்கள் தமது இனிய தமிழ் மொழி பேசுவதை அநாகரிகமாக நினைக்கின்றனர். எமது மொழியையும் கலாசாரத்தையும் மறந்தும் மறைத்தும் வாழ்கின்ற இந்த நிலை வெட்கப்படவேண்டியது.

இவ்வாறு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய ஒய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தின விழாக்குழு பொறுப்பாசிரியர் திருமதி பி.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

தமிழைநாம் வளர்த்தோம் என்பதை விட தமிழால் நாம் வளர்ந்தோம் என்பதே உண்மையானது. தமிழால் வளர்ந்து அத்தமிழில் பல புதுமைகளைக்காண முனைந்தவர்கள் தமிழ் வளர்த்தோர்களாகக் கணிக்கப்படுகின்றனர். அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு என்பதை விட தமிழுக்குள் இருப்பவற்றை ஆழ்ந்து அகழ்ந்து வெளிக்கொணர்ந்தார்கள் என்பதே பொருத்தமானதாகும்.

பொட்டுடனும் பூவுடனும் காணப்பட்ட எம் தமிழ்ப் பெண்இனம் அவை இன்றி அந்நிய மோகத்கில் மூழ்கிப் போவது மட்டுமன்றி தம்முடைய கலாசாரத்தில் பிறழ்வுகளை மேற்கொண்டு வாழ்வது பெரும் தலைகுனிவை எம் இனத்திற்கு ஏற்படுத்துகின்றது. தமிழில் பேசுவதை வெட்கமாகவும் தரக்குறைவாகவும் கருதுகின்ற நிலை தென்பகுதி தமிழர்களில் காணப்படுகின்றது.

உண்மையில் எங்குசென்றாலும் எந்தஇடத்திலும் நான் பிறந்த பொழுது பேசிய தமிழ் மொழியிலே எவ்வித சலனமுமின்றி நாடுமுழுவதும் தமிழ் பேசுபவன்இஸ்லாமியத் தமிழனேஎனக்குறிப்பிட்டார்

அதிபர்க.இராஜதுரைவிழாவில் ஆசியுரை வழங்கினார்.

(க-77)

## விவசாய குழுக்கூட்டம்

ஊர்காவற்றுறைப் பிரதேச விவசாயக் குழுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேசசெயலக மகாநாட்டு மண்டபத்தில் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

[செ-75]

## ரயில்சேவை ரத்து

(கொழும்பு)

மாத்தளையிலிருந்து கொழும்புக்கான ரயில் சேவை திடீரென ரத்துச் செய்யப் பட்டுள்ளது. இதனால் மாத்தளைக்கும் கொழும்புக்குமிடையிலான பயணிகள் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பாதையூடான ரயில் சேவையானது ஒரு வருடத்திற்கு முன்னர் அமைச்சர் பௌஸியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(க-59)

## கருத்தரங்கு

''நாடகக்கலையின் ஊடாகவும்,சீர்மியநெறியின்ஊடாகவும் பாடமேம்பாட்டுத் திட்டங்களை அமுல்படுத்தல்'' எனும் தலைப்பிலான கருத்தரங்குஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை யா/ இராமநாதன்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களே இக்கருத்தரங்கில் பங்கு கொள்ள முடியும் என வலிகாமம் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதிகோகிலாமகேந்திரன் தெரிவித்துள்ளார். 106


# மக்கள் வங்கி

மகிழ்ச்சியுடன் அறிமுகப்படுத்தும்
குறுகிய கால வைப்புக்களுக்கான
கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள்

நிலையான வைப்புக்களுக்கான அதிகரிக்கப்பட்ட வட்டி விகிதங்கள்

| வைப்புக்காலம் | அதிகுறைந்த தொகை | வருட வட்டி |
|---|---|---|
| 3 மாதம் | 1000 ரூபா | 15% |
| 6 மாதம் | 1000 ரூபா | 14% |
| 12 மாதம் | 1000 ரூபா | 13% |

(கி1054)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## தமிழ் மொழியும் இலக்கியமும்

நேரம்:- 1 மணி

ஆக்கம்:- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தமிழ் ஆசிரியை

### பொருத்தமான விடையினைத் தெரிக.

1) ''முத்துமணிவைவேலின் வீதியுலா'' இதில் வை என்பதன் பொருள்
1) அழகு 2) வைத்தல் 3) மென்மை 4) கூர்மை

2) கந்துகம்,பாடலம் என்பன குறிப்பது
1) குதிரையை 2) தேரை 3) பாட்டை 4) நிறைவை

3) அவனியில் என்றும் ஆதரம் பெருகுக.ஆதரம் என்பது
1) ஆதரவு 2) அன்பு 3) மழை 4) வளம்

4) ஆயுதபாணிகளது நடமாட்டம் அவலத்தைத் தோற்றுவித்துள்ளது ஆயுதன் என்பதன் எதிர்ப்பதம்
1) அடிமை 2)அதர்மன் 3) நிராயுதன் 4) நிராதாரன்

5) ''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்''மடமை என்பதன் எதிர்ப்பதம்
1) தீமை 2) நன்மை 3) பெருமை 4) புலமை

6) 1997 ம் ஆண்டு கல்விச் சீர்திருத்த ஆண்டாக அரசு -------- செய்துள்ளது
1) அறிவிப்பு 2) பிரசுரம் 3) நியமனம் 4) பிரகடனம்

7) தொலைக்காட்சி,வானொலிக்கான —————— க் கட்டணங்கள் அரசினால் மீளப் பெறப்பட்டது.
1) உத்தரவுச்சீட்டு 2) நுழைவுச்சீட்டு
3) பிரவேசச்சீட்டு 4) பற்றுச்சீட்டு

8) பல்கலைக்கழக அனுமதி மாவட்ட ————அடிப்படையிலேயே தொடர்ந்தும் இடம் பெறும்.
1) இனரீதியான 2) விகிதாசார 3) தகுதிகாண் 4) செல்வாக்கு

9) 'வலம்புரி'———— தொகை அதிகரித்து வருகிறது
1) பிரமுகர்களது 2) அனுதாபிகளது
3) நிராகரிப்பானது 4) வாசகர்களது

10) சுகத தாச விளையாட்டரங்கில் தேசிய விளையாட்டு விழா————ஆரம்பமாகியது
1) கோலகாலமாக 2, கோலகலமாக
3) கோலாகலமாக 4) கோகுலமாக

11) தோற்கருவி,துளைக்கருவி,நரம்புக்கருவிகள் ஒன்றிணைந்து இசைத்தல்
1) சங்கீதம் 2) கச்சேரி 3) இன்னிசை 4) குயிலுவம்

12) அகர முதலிய எழுத்துக்கள் தொடங்கும் சொற்கோவை
1) சொல்லியம் 2) நெடுங்கணக்கு 3) கலைக்களஞ்சியம் 4) அரிவரிச்சுவடு

13) சக்கரம்,வில்,வாள்,தண்டு,சங்கு என்பன
1) பஞ்சலட்சணம் 2) பஞ்சாயுதம் 3) பஞ்சகோணம் 4) பஞ்சகணம்

14) ஆடவருள் சிறந்தவர்
1) செம்மல 2) அழகர் 3) முருகர் 4) அருளாளர்

15) கட்டுக்கடங்காத இளைஞன்
1) சிறுபட்டி 2) காளை 3) ஊதாரி 4) விவேகி

16) முயற்சியின்றிக் காரியம் கை கூடுவது துர்லபம் என்ற கருத்தமைந்த பழமொழி
1) சாணேற முழம் சறுக்கும் 2) மயிலே மயிலே என்றால் இறகு போடுமா
3) எறும்பூரக் கற்குழியும் 4) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

17) அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம் இப்பழமொழிக்கு ஒத்த பழமொழி
1) ஆழ அமுக்கினாலும் நாழி முகவாது 2) குறிப்பூச்சு நெஞ்சிருட்டு
3) கூழுக்குமாசை;மீசைக்குமாசை 4) நித்தம் போனால் முற்றம்சலிக்கும்

18) தனது அண்ணன் செயலைக் கண்டித்து நல்லவற்றை இடித்துரைத்தான் கும்பகர்ணன் இடித்துரைத்தல் என்ற மரபுத் தொடர் உணர்த்தும் பொருள்
1) கோபமாகக்கூறல் 2) வற்புறுத்திக்கூறல்
3) விளக்கிக் கூறல் 4) அன்பாகக்கூறல்

19) நிலையற்றதுஎன்பதை உணர்த்தாத உவமைத்தொடர்
1) மலையாடு மஞ்சுபோல 2) நீர்மேல் எழுத்துப்போல
3) நீர்க்குமிழி போல 4) குன்றிலிட்ட தீபம் போல

20) மாணவர் பலர் வெட்டிப் பேச்சில் ஈடுபட்டு காலத்தை வீணே கழிக்கின்றனர். வெட்டிப் பேச்சு என்ற மரபுத்தொடரின் பொருள்
1) விவாதப்பேச்சு 2) வீண்பேச்சு 3) எதிர்ப்பேச்சு 4) பயனுள்ளபேச்சு

# கிளி. தர்மபுரம் வைத்தியசாலையில் மலேரியா நோயாளர் அதிகரிப்பு

## கடந்தமாதம் மட்டும் 1067 பேர் சிகிச்சை

(கெ. மு.ப.பு)

கிளிநொச்சி தர்மபுரம் வைத்தியசாலையில், மலேரியா காய்ச்சல் நோய்க்கான சிகிச்சை பெறச் செல்வோர் தொகை வெகுவாக அதிகரித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வகையில், ஆயிரத்து 67 பேர் மேற்படி மருத்துவமனையில் கடந்த மாதம் மலேரியா நோய்க்கான சிகிச்சை பெற்றுள்ளனர்.

இம் மாதத்தில், கடந்த 20 நாட்களில் மட்டும்4ஆயிரத்து 513 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில், 206 பேர் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றதுடன் ஒரு தொகுதியினர் குணமடைந்து வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளைவயிற்றோட்ட நோய்க்கு சிகிச்சை பெற வருவோர் தொகையும் கணிசமானளவு அதிகரித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தொடரும் மழை, இந்நோய்களின் தாக்கத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் என சுகாதார துறையினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

(உ-5)

# உண்மைக்கு புறம்பாக செய்திகள் வருகின்றன

## சாடுகிறார் சமாசத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல நோக்குக்கூட்டுறவுச்சங்கசெயற்பாடுதொடர்பாக கொழும்பு தமிழ் பத்திரிகைகள் மற்றும் உள்ளூர் பத்திரிகைகளும் உண்மைக்குப் புறம்பான செய்திகளைவெளியிட்டு மக்களைகுழப் பத்தில் ஆழ்த்திவிடுகின்றன.இதுவிடயத்தில் நிதானப் போக்குஅவசியமாகும்.

யாழ்.பல நோக்குக்கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தலைமை வகித்து உரையாற்றிய யாழ்.மாவட்ட விவசாய நுகர்வோர் கூட்டுறவு சங்க சமாசத்தலைவர் சி. வீ. கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை மேற்கோள் காட்டிமேற்படி பத்திரிகைகள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டன. இது விடயத்தில் உண்மை நிலையைதெரிவுபடுத்தும் முகமாகவே இக்கலந்துரையாடலை ஒழுங்கு செய்துள்ளேன்

யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கங்களுக்குஎன்று10லொறிகள் கொள்வனவு செய்யப்பட்டன. இக்கொள்வனவின் போது இலவசமாக வழங்கப்பட்ட லொறி தனியாருக்கு இலஞ்சமாக வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த செய்தியில் எவ் உண்மையும் கிடையாது.

உண்மை நிலையாதெனில் யாழ்.குடாநாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு லொறி கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டது.

அதற்காக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் (திருமலை)குறைந்த வட்டியில் தலா 15 இலட்சம்ரூபா தருமாறு கேட்டிருந்தோம். இதற்கமைய லங்கா அசோக் லேடன் கம்பனியுடன்லொறி கொள்வனவு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு 8 லொறிகளை கொள்வனவு செய்து, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, புலோலி, சுன்னாகம்,சாவகச்சேரி, சங்கானை, தென்மராட்சி,பச்சிலைப்பள்ளிஆகிய கிளைகளிடம் கையளித்தோம். இதன்போது நல்லூர் பலநோக்குக் கூட்டுறவு சங்கமும் லொறிகொள்வனவிற்கு எம்முடன் தொடர்புவைத்து இறுதியில் வாபஸ்பெற்றுக் கொண்டது. இதுவே உண்மை நிலையாகும்.

இதே நேரம் குறிப்பிட்ட வாகனக் கம்பனியில்கூட அப்படி ஒரு நடைமுறை இல்லை என்று கூறி எமக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப கடிதமும் லொறிகொள்வனவு தொடர்பான ஆவணங்களும் கலந்துரையாடலில் பங்குபற்றியோருக்கு காண்பிக்கப்பட்டிருந்தது.

### பொருட் கொள்வனவு

பொருட் கொளவனவில் கூட நாம் எமது கட்டுப்பாடுகளுக்கும் நடைமுறைஒழுங்குகளுக்கும் உட்பட்டு கொழும்பில் உள்ள கம்பனிகளுடன் நேரடித் தொடர்புகள் வைத்துக்கொள்வனவு செய்வதனாலேயே பொருட்களின் விலைகளை தனியாரிலும் பார்க்க மலிவாக நிர்ணயிக்க முடிகின்றது;

### உகண கப்பல்

யாழ்ப்பாணத்திற்கு பொருட்கள் ஏற்றிவரப்பட்ட கப்பல் இழப்புக்குள்ளானதில் தனியாரின் பொருட்களுடன் எமது பொருட்களும் இழப்புக்குள்ளானது. எமது இழப்பீட்டினை வழங்குமாறு கப்பல் கப்பனியை முதல் முறை கேட்டுக் கொண்டது சமாசம் என்பதை தெளிவு படுத்த விரும்புகின்றேன்.

### பொருட்கள் விநியோக நடைமுறை

பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு கப்பலில்ஏற்றி யாழ்.குடாநாட்டுகூட்டுறவுச் சங்கங்களுக்கு வரும் வரை எமது சங்கத்தின் குறியீட்டு பொறியிடப்பட்டு வரும்.

இதனால் எப்பொருளும் வழிமாறிப்போவதற்கு சாத்தியமில்லை என்பதுடன் சங்கங்களினால் விற்பனைசெய்ய முடியாத பொருட்களையே தனியாருக்கு குறைந்தவிலையில் விற்கப்பட்டு முதலை மீட்டு எடுக்கின்றோம்.

### ஜீ. எஸ். ரி.

கப்பலில் ஏற்றப்படுவதற்கு அறவிடப்படும் ஜீ. எஸ். ரி வரியினை நீக்குமாறு கப்பல் கம்பனி முதல் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுக்கும் எடுத்துக்கூறியது எமது சமாசமே;

கடந்த 98ம் ஆண்டு 9ம் மாதம் முதல் ஜி.எஸ்.ரி யை நீக்குமாறு அரசாங்கத்தைக் கோரி வருகின்றேன். அண்மையில் நிகழ்ந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கூடஇக்கருத்தை முன்வைத்தோம்.

### கூட்டுறவில் ஊழல்

இது தொடர்பான கருத்து மக்கள் மத்தியில் மேலும் வளரக்கூடாது. இக்கருத்தினை நீக்கும் முகமாகவே எமது நிர்வாக முறையில் புதியநடைமுறைகளை அமுல் படுத்திவருகின்றோம்.

### நிவாரண விநியோகம்

அரசாங்கம் தரும்பொருட்களையே நாம் விநியோகிக்கின்றோம். செய்திகள்வெளியாகியபோது ஏற்கனவே பதுக்கப்பட்ட பொருட்களை நாம் விநியோகிப்பது இல்லை. அதற்கான களஞ்சிய வசதிகள்கூட எம்மிடம் இல்லை என்றார்.

மேற்படி செய்தியாளர் மாநாட்டில் 23 பல நோ. கூ. சங்கத் தலைவர்களும், பொது முகாமையாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# விடைகள்

## இம்மாதம் 21 ஆம் 22 ஆம் திகதிகளில் வெளியான சைவ சமயம் பகுதி 1 மாதிரி வினாக்களுக்கான விடைகள்

01. மூல விநாயகர்
02. திருவரங்கம்
03. சங்கரர்
04. பிரமாணவியல் இலக்கணவியல்
05. சைவத்தின்தொன்மை
06. இடபரூபர்
07. யோகம்
08. மலர்
09. சிங்கம்
10. யோகர்சுவாமி
11. 77 ஆகும்
12. சம்பந்தர்
13. குருலிங்க சங்கமம்
14. பட்டினத்துப்பிள்ளை
15. இரவுங்க மாலை
16. சவ்ரா
17. அர்க்கியம்
18. பரஞ்சோதி
19. காழி வேந்தர்
20. சுவேதவனப் பெருமாள்
21. பதிமுது நிலை
22. நல்லூர்
23. நற்சிந்தனை
24. 1879
25. சிவன்
26. 5 ஆம் தந்திரம்
27. படைத்தல்
28. ஞானபண்டிதன்
29. பொன்னம்பல வானேசர்
30. இதயமென்னும்தாமரை
31. ஈழத்துப்பண்டைய கல்வெட்டு
32. இல்லறவியல்
33. தூரத்தில் உள்ளவர்க்கு
34. கோவைப்பிரபந்தங்கள்
35. சொருப நிலை
36. சுவாமி விவேகானந்தர்
37, கி.பி 8ஆம் நூற்றாண்டு
38. இரட்சை
39. அப்பர் திருநனிப்பள்ளி
40. கந்தபுராணம்

## இன்று ஒரு தகவல்

# நம்பிக்கை அற்புதங்களைச் செய்யும்

குழந்தைப் பராயத்தில் கிருஷ்ண பிரானின் அழகைப் பற்றிய ஒரு பாட்டைத் தற்செயலாகக் கேட்ட கள்வன், ஒரு நிமிடம் ஸ்தம்பித்து நின்றான். அந்த இடத்தை விட்டு அவன் நகரவே இல்லை. கிருஷ்ணர் அணிந்திருந்த ஆபரணங்களின் விபரத்தைக் கேட்டதும், இந்த விலை மதிப்புமிக்க பொக்கிஷங்களைக் களவாட அவன் பெரும் விருப்புக் கொண்டான். அவன் பண்டிதரிடம் குறிப்பாகக் கிருஷ்ணர் பசுக்களை எங்கே கவனிப்பார்? தனிமையிலா அல்லது தனது மூத்த சகோதரனுடனா அல்லது தோழர்களுடனா என்று கேட்டான். பண்டிதர் மிகச் சுருக்கமாக ''பிருந்தாவனத்தில் யமுனைக் கரையில்'' என்றார். கிருஷ்ணரைத் தனிமையில் பிடித்து ஆபரணங்களைப் பிடுங்கிக் கொள்ளத் திட்டமிட்ட அவன் பிருந்தாவனத்திற்கு விரைந்தான்.

மறுநாட்காலை கிருஷ்ணனைத் தனிமையில் சந்தித்தான். ஆனால் அந்த அழகிலிருந்து எப்படி அவன் ஆபரணங்களை எடுக்கமுடியும்? ஒன்றை நீக்கினாலும் அவருடைய அழகு குறைந்து போகும் என்ற பயத்தில் அவனது இதயம் அதைச் செய்யச் சம்மதிக்கவில்லை. கிருஷ்ணர் தானாகவே 'ஏன் நீ இவ்வளவு தூரம் வந்திருக்கிறாய்?' என்று கேட்கும் வரை அவன் மணித்தியாலக் கணக்காகத் தன்னை மறந்த நிலையில் கிருஷ்ணரைப் பார்த்துக் கொண்டிருந்தான். தான் வந்த காரியம் ஞாபகத்திற்கு வந்தது. ஆனால் அதனைக் குறிப்பிட அவனுக்கு வெட்கமாயிருந்தது. கிருஷ்ணர் இதனை அறிந்ததால் தான் அணிந்திருந்த எல்லா நகைகளையும் அவனிடம் கொடுத்தார். கள்வன் வெட்கத்தையும், சந்தோஷத்தையும் சமாளித்துக் கொண்டு கிருஷ்ணரின் காலில் விழ்ந்தான். ஆனால் அவன் எழுந்த போது கிருஷ்ணர் காணப்படவில்லை.

அவன் கிராமத்துக்கு மீண்டும் வந்து பண்டிதரைக் கண்டு ''நீங்கள் அன்று புகழ்ந்த கிருஷ்ணரின் நகைகள் இவைகளா? நான் பிருந்தாவனத்திற்குச் சென்றேன். அப்போ அவர் அவைகளை எனக்குத் தந்தார்'' என்றான். சொல்வதற்கு எதுவும் அவசியமின்றி அந்தப் பண்டிதர் கள்வனின் காலில் வீழ்ந்தார். நம்பிக்கை அற்புதங்களைச் செய்யக் கூடியது. நம்பிக்கை கடவுளைக் கட்டாயப் படுத்த, நீங்கள் நம்புவதைத் தானாகவே தயாரித்து உங்களுக்குத் தருவார்.

நன்றி
பாபா சொன்ன கதைகள்

# மேலதிக மாகாணகல்விப் பணிப்பாளர்கனடா பயணம்

(யாழ்ப்பாணம்)
கனடாவில் உள்ள இந்து சமய சங்கத்தின் அழைப்பின் பேரில் அங்கு நடைபெறும் கலாசார விழாவில் கலந்து கொள்வதற்காக மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் என். தணிகாசலம் பிள்ளை டிசம்பர் மாதம் கனடா பயணமாகவுள்ளார்.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொளளவுள்ள மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் ஈழத்து கலைகள் சம்பந்தமாக விரிவுரையாற்றவுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். (க-3)

# விசாரணைஅறிக்கையை மனிதஉரிமை ஆணைக்குழு சமர்ப்பிக்க வேண்டும்

(கொழும்பு)
பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இடம் பெற்ற தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையினை மனித உரிமைகள் ஆணைக்குழுபாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தசமரசிங்க கேட்டுள்ளார்.

இந்த விசாரணை அறிக்கைகள் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார். (வ)

# பொலிஸாரின் சடலம் ஒப்படைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கஸ்தூரியார்வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் சடலம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வெலிகமவில் உள்ள அவரது வீட்டுக்கு சடலத்தை அனுப்புவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிரஸ்தாப சம்பவத்தில் உயிரிழந்த பொலிஸ்கான்ஸ்டபிள் விஜயவீர மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். (இ)

# மலையக இளைஞர்களுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

(கொழும்பு)
பண்டாரவளை பிந்துனுவெவ புனர் வாழ்வு முகாமில் இடம்பெற்ற மனிதப்படுகொலைகளை அடுத்து கைது செய்யப்பட்ட மலையகத்தைச் சேர்ந்த 49தமிழ் இளைஞர்கள் நேற்று நுவரெலியா மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

ஆஜர்படுத்தப்பட்ட 49 இளைஞர்களையும் அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட 49 தமிழ் இளைஞர்களும் அவசர காலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பதனால் இவர்களது விடுதலையிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக நீதவான் தெரிவித்துள்ளார். (வ)

# பகவானின் பிறந்த தினம்

(யாழ்ப்பாணம்)
பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபாவின் 75-வது பிறந்த தினவிழா இன்று பி. ப 1. 30 மணிக்கு ஊரெழு சத்யசாயி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை மு. திருநாவுக்கரசு (பதில் நீதிபதி) நிகழ்த்துகின்றார். [ச]

★ ★ ★

பகவான் ஸ்ரீசத்யசாயி பாபா பிறந்த தினவிழா இன்று 23 ஆம் திகதி திருநெல்வேலி பகவான் ஸ்ரீசத்யசாயி சேவா நிலையத்தில் சிறப்பாகக் கொண்டாடப் படவுள்ளது. விஷேட பஜனை, பண்ணிசை, சொற்பொழிவு என்பன இதில் இடம் பெறவுள்ளன. (ச-103)

★ ★ ★

ஸ்ரீசத்ய சாயிபாபாவின் 75 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு இன்று கோண்டாவில் சத்யசாயி நிலையத்தில் ஓங்காரம், பஜனை என்பவற்றுடன் பேச்சு, நாடகம், திருவூஞ்சல் பாட்டு முதலிய கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வில் கலாநிதி நா. ஞானகுமாரன் 'அவதாரமும் அற்புதமும்' என்னும் தலைப்பில் சிறப்புரை ஒன்றினை நிகழ்த்தவுள்ளார். (ச-14)

# வீடுகள்சேதம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட பெருமழை காரணமாக 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்திருப்பதாக அம் மாவட்ட அரச அதிபர்மௌனகுருசாமி தெரிவித்துள்ளார். (உ)

# கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)
ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவருக்கு வழங்கப்படும் கொடுப்பனவு இரட்டிப்பாக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தற்போது, மாதாந்தம்240 ரூபா வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

# மாணவியை மீட்ட மீனவர்

(மட்டக்களப்பு)
வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்ட பாடசாலை மாணவியை மீனவர் காப்பாற்றினர்.

மட்டக்களப்பு மாவட்ட திமிலத் தீவு என்ற இடத்தைச்சேர்ந்த 14 வயது மாணவியே இவ்வாறு காப்பாற்றப் பட்டவராவர். (உ)

# இன்று பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)
யாழ்/சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலை பரிசளிப்பு விழாவும், கலைவிழாவும் இன்று பி. ப. 1-00 மணியளவில் பாடசாலை அதிபர் வி. ஏரம்பமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஸ்கந்தவரோதையக் கல்லூரி ஆசிரியர் ஆறு. திருமுருகன் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக முந்நாள் அதிபர்களான திருமதி பா. சிவானந்தம், க. தெட்சணாமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (உ)



# பகவான் சாயியின் தரிசனம்

## ''கோடைக்கானலில் ஒருநாள்....''

இருளை வீழ்த்து இடித்தெறிந்த — விழி
விடியலை மகிழ்வோடு வரவேற்று — ஒரு
காலைப் பயணியாய் அங்கங்கே
துணை சேர்ந்து அமர்ந்திட்டோம்.

கோடைக்கு வாசலாகி மனதுக்கு ஸ்தலமாகி
சோடை போகாத மலைகளின் வனப்பை
இடையினில் தவழ்ந்து இளங் கதிரவனை
அடைப்பட்ட பயணியாய் பார்த்திட்டோம்.

தடைப்பட்ட மனதை மனம் தொட்ட அழகை
விடுபட்ட இமையழைக்க விழி பூத்தது
தொடுபட்ட இலக்கை பார்வை பட
பாதம் பயண நடையுமிட

...இதுவரை வந்திராத இனியசுகம்
மெதுவாக காற்றினில் மிதந்து வர
புதியதோர் நிலவாய்
ஆனந்த ஜோதியாய்
கற்பனைக்குள் ஊற்றெடுத்த
கற்பக விருட்சமாய்

உலகைச் சுற்றத்தை
ஆக்கிரமித்த சக்தியாய் — விலகிப்போகின்ற
இருளைப் போக்கும் ஒளியாய்
உலாவரும் 'நிலா' ஆம்
உனைக்காண காத்திருந்த மனங்களோடு
கலந்து இருந்தேன்.

பலதரப்பட்ட மனங்களுக்குள்
நிலைபெறப்பட்ட மௌனம்
ஆச்சரியம்! அதில் சில மழலையும்
மௌனம் சாதிக்கிறது — ஆச்சரியம்!
யௌவன நூலில்.........

பொன்னிற மேனியனாய்
செந்நிற ஆடையினை அணிந்து
எங்கெங்கிருந்தோ வந்தமர்ந்த
இதயங்களை ஆக்கிரமித்தான்.

அபிநயத்தால் ஆட்கொண்டு
விழி ஒளி பார்வை தொட்டான்
தேக்கி வைத்த பார்வைகளில்
பயணங்களைத் தொடரச் செய்ய
உலாவினான்...

தரையோடு உறவாடும் பாதமலரை
தலையாலே சூட்டிக் கொள்ள
இதயத்தை தேடிச் சென்றான்
தீபத்தை ஏற்றி வைத்து
மறைந்து கொண்டான்...

பார்வைக்கு தெவிட்டாத இன்பமது
பார்க்கக் கொடுக்காதது — துன்பமே
பர்த்தி வாசனே பக்கமிரு!
'பாபா' நினைவே சங்கமிரு

தெய்வத்தை காண்பது நிஜமோ?
தெய்வமாக வாழ்வது நிஜமே
பாபா அவதார புருஷராய்
கலியுகத் தெய்வமாக...
கருணையின் உருவமாக
கற்பக விருட்சமாக வாழ்வது நிஜமே'

ஆர் சுதாகரன்
(வங்கியாளர்)

கோடைக்கானலில் சாயி பகவான் தரிசனம் பெற்ற பக்தர் ஒருவரின் இன்ப அனுபவம்

# உன்றன் பாதம் தா

இராகம்—சாமா தாளம்—ஆதி

**பல்லவி**

சாயிபாபா சாந்தசொரூபி சத்தியசிலனே—அப்
பாவி எம்மை இரட்சிக்கவே பறந்து வாராயோ
(சாயி)

**அனு பல்லவி**

மாயை மறைக்குது மருட்சிநிறையுது மீட்சி
பெற்றிட—இச்
சேயை அணைத்திட தேவா சீக்கிரம் திரும்பிப்
பாராயோ— (சாயி)

**சரணம்**

இருட்டுவீட்டில் ஒளியைக்காண ஏங்குகின்றேனே
திருட்டுத்தனமும் தீயகுணமும் நிறைந்த உலகிலே
முரட்டுத்தனத்தால் மோசம் போனேன்
மோட்சம் காட்டாது
விரட்டிடாதே வேண்டுகின்றேன் உன்றன்
பாதம் தா (சாயி)

கீழ்கரவை-செல்லையா வல்லிபுரம்

# டில்லி மக்களவையில் அமளிதுமளி

## மூன்றுமுறை சபை ஒத்திவைப்பு

(புதுடில்லி)

டில்லி நாடாளுமன்றில் நேற்று பெரும் அமளிதுமளி ஏற்பட்டதாகவும் உறுப்பினர்கள் காரசாரமான சொற்போரில் ஈடுபட்டதாகவும் மக்களவை மூன்று முறை ஒத்தி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற மக்களவைக் கூட்டம் தொடங்கியபொழுது விவசாயிகள் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்கு சபை ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை சமாஜவாதிக் கட்சியினர் கொண்டு வந்தனர்.

அவர்கள் சபையின் நடுவே வந்து பேசினார்கள். இதே வேளை காங்கிரஸ்தான் முதலில் விவசாயிகள் பிரச்சினையை எழுப்பியதென்றும் காங்கிரஸ்தலைவி சோனியா காந்தியை முதலில் பேசவிடும்படி சபையின் நடுவே வந்தும் உரத்துப் பேசினர் சபையில் அனேக அங்கத்தவர்கள் ஆசனத்தைவிட்டு எழுந்து நடுவே வந்து ஒருவரையொருவர் தாக்கிப் பேசியதால் சோனியாவின்பேச்சு எதுவும் யாருக்கும் புரியவில்லை.

சபாநாயகர் பாலஜோஸி சபையை ஒத்திவைத்தார்.

ஒருமணிக்கு திரும்பவும் மக்களவை கூடியபோது சமாஜவாதிக் கட்சியினரும் காங்கிரஸ் கட்சியினரும் சபையில் குழப்பங்களை விளைவித்துக்கொண்டிருந்தனர்.

**உலக தரிசனம்**

அங்கத்தவர்களை ஆசனங்களிலிருந்து அமைதி பேணும்படி சபாநாயகர் பல முறை வேண்டிய பொழுதும் அங்கத்தவர்கள் கட்டுக்கடங்காததால் சபை மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டது.

மாலைநான்குமணிக்குசபை மீண்டும் கூடியபோது கூச்சல் குழப்பம் மேலும் அதிகரிக்கவே மக்களவையை சபாநாயகர் மறுநாளுக்கு ஒத்தி வைத்தார். (து)

# பேரு நாட்டில் தொடரும் பதற்ற நிலைக்கு பொறுப்பேற்கிறார் அதிபர்

(லிமா)

தென் அமெரிக்காவின் பேரு நாட்டில் ஏற்பட்டிருக்கும் பதற்ற அமைதியின்மைக்கும் நானே பொறுப்பு என்று நாட்டின் தலைவர் குச்சிமோரி தெரிவித்தார்.

நாட்டை விட்டுத் தப்பியோடி ஜப்பானின் விடுதி ஒன்றில் தங்கியிருக்கும்மோரி தான் விட்ட பிழைகளை மறைமுகமாகச்சுட்டிக்காட்டி அதற்கு வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்அலெக்சாண்டியா புளோரிடா நாட்டில் அதிபராக நியமிக்கப்பட இருப்பதாக சிலமாதங்களின் பின் நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்று புதிய ஒரு அதிபரைத் தெரிவாக்கவென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# "மனநலங் குன்றியோருக்கு எங்களால் உதவ முடியும்"

(சிங்கப்பூர்)

''சிங்கப்பூரில் மனநலங் குன்றியோருக்கு உதவுவதற்கு எங்களால் முடியும்'' என்ற அமைப்பு முன் வந்துள்ளது.

இந்த அமைப்பு மூன்றாண்டுத் திட்டமொன்றை வகுத்துள்ளது. அந்தத் திட்டத்தின் மூலம் ஒன்றரை மில்லியன் டொலர்களைச் சேகரிக்கவுள்ளது.

''எங்களால் முடியும்'' என்ற அமைப்பு சிங்கப்பூரிலுள்ள மனநலங் குன்றியோரின் செலவுக்காகவும், வைத்தியச் செலவுக்காகவும் இத்தொகையைச் செலவிடவுள்ளது. இவர்களின் பராமரிப்பில் இருநூறு மனநலம்குன்றியோர் இருக்கிறார்களென்று தெரிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூரில்இருபத்தியெண்ணாயிரம்பேர்மனநலம்குன்றியிருக்கிறார்களென்று வேறு செய்தியொன்றும் கூறுகிறது. (து)

# அமெரிக்க அதிபரின் விஜயம் செயலர் அறிக்கை வெளியீடு

(நியூயோர்க்)

அமெரிக்க அதிபர் பில் கிளிங்டனின் மூன்று நாள் வியட்நாம் ஒருமையின் முடிவில் வியட்நாம் கம்யூனிஸ் கட்சியின் பொதுச் செயலாளர் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

வியட்நாம் அமெரிக்க போரில் முந்திய அமெரிக்காவின் ஆட்சிமுறையை சாடியுள்ளது

கம்யூனிஸ் கட்சியின்பொதுச் செயலாளர் லீஹபைய் அறிக்கையில் தெரிவிக்கையில் கருத்து வேறுபட்ட நாடுகளுடன் புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் வளருமென எதிர்பார்க்க முடியாதென்றும் அதேவேளை.அமெரிக்காவின் விருப்பங்களையும் தெரிவுகளையும் நாம் மதிக்கின்றோம் என்று தெரிவித்தார்.

மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கையில்; ஒருநாடு மற்ற நாட்டின் சுதந்திரத்தையும் சுய அடையாளத்தையும் மதிப்பதாக இருந்தால் அந்த நாட்டின்உள் விவகாரங்களில் தலையிடக்கூடாதென்றும் தெரிவித்தார். (து)

# இஸ்ரேலுக்கான தூதுவரை எகிப்து திருப்பியழைத்தது

(செய்ரோ)

பலஸ்தீனத்திற்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதல் நடவடிக்கைகளை கண்டித்து, இஸ்ரேலுக்கான தனது நாட்டு தூதுவரை எகிப்து திருப்பியழைத்துள்ளது.

எனினும், எகிப்துக்கான தனது தூதுவரை திருப்பியழைக்கும் நோக்கம் எதுவும் இப்போதைக்கு கிடையாதென இஸ்ரேலிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, எகிப்தின் நடவடிக்கை பாரதூரமானதெனவும், மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளிற்கான தனது பங்களிப்பை கட்டுப்படுத்தும் செயலாக இது அமைவதாகவும் இஸ்ரேலிய ஆதரவு நாடுகள் கருத்துத் தெரிவித்துள்ளன. (உ)

# நடுத்தர வயதை கடந்த பெண்களுக்கு குடல் புற்று நோய் ஏற்படும்?

## பிரான்ஸ் ஆய்வு திடுக்கிடும் தகவல்

(பரீஸ்)

நடுத்தர வயதைக் கடந்தவர்களுக்கு குடல் புற்று நோய் ஏற்படும் அபாயம் அதிகமாக இருப்பதாக பிரான்ஸ் நிறுவனம் ஒன்று ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளது.

50 தொடக்கம் 55 வயதிற்கு இடைப்பட்டவர்களுக்கு அதிலும் முக்கியமாக பெண்களுக்கு இந்நோய் ஏற்படும் வாய்ப்பு அதிகமாகவே காணப்படுகிறது

மேற்கு ஐரோப்பாவில், எய்ட்ஸ் நோய்க்கு அடுத்தபடியாக மக்களின் உயிருக்கு பேரச்சுறுத்தலாக விளங்குவது இக் குடல் புற்றுநோயாகும்.

வருடத்திற்கு 3.5 மில்லியன் பேர் இந்நோய்க்கு ஆளாகின்றனர் எனவும், ஆரம்பத்திலேயே உரிய சிகிச்சையளிப்பதன்மூலம் நோயின் தாக்கத்தை ஓரளவு குறைக்க முடியும் எனவும் அவ் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# நான்கு நாள் தொடரும் ஆசியான் உச்சி மகாநாடு

(சிங்கப்பூர்)

ஆசியான் நாடுகளின் மகாநாடு நேற்று சிங்கப்பூரில் ஆரம்பமானது.

பத்து அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த மகாநாட்டில் இந்தோனேசிய,பர்மா போன்ற நாடுகளின் தொடரும் நெருக்கடிகள் பற்றியும் அங்கத்துவ நாடுகளின் பொருளாதார நிலை பற்றியும் பேச்சுக்கள் தொடருமென்று தெரியவருகிறது.

ஆசியான் மகாநாட்டில் கலந்து கொண்டும்,ஜப்பான் பிரதமர் ஜெமிரோயும், சீனப் பிரதமர் சுறோஸ்சிங்கும், கொரிய அதிபர் கிஸ்யோசிங்கும் தனித்தனியே கலந்துரையாட இருக்கின்றனர்.

ஆசியான் மகாநாட்டில் வெளியுறவு அமைச்சர்களும் நிதி அமைச்சர்களும் கலந்து கொள்ளும் மகாநாடு முக்கிய இடம் வகிக்க இருக்கிறது.

இம் மகாநாடு நான்கு நாட்கள் தொடருமென அறிவிக்கப்படுகிறது. (து)

# போதை மாத்திரைகளுடன் ஆறு தாய்லாந்துக்காரர் கைது

(சிங்கப்பூர்)

யாவா போதை மாத்திரை வைத்திருந்தவர்களை சிங்கப்பூர் பொலிஸார் சுற்றி வளைத்து கைதுசெய்துள்ளனர்.

சிங்கப்பூர் யோஸாப் பகுதியில் திடீரென ஒரு வீட்டை பொலிஸார் சுற்றிவளைத்து முற்றுகையிட்ட பொழுது ஆறுபேரை யாவாமாத்திரைகளுடன் கைதுசெய்தனர்

இரண்டாயிரத்து இருநூறு யாவா மாத்திரைகளைக் கைப்பற்றினர்.

கடந்த ஆண்டு கொண்டு வரப்பட்ட கடத்தல் யாவா மாத்திரைகளிலும் பன்மடங்கு இவ்வாண்டு கடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

பிடிபட்ட ஆறுபேரும் தாய்லாந்தைச் சேர்ந்தவர்களென்றும் ஒருவர் கள்ளக் குடியேற்றக்காரரர்என்று பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

ஆறுபேரையும் விளக்க மறியலில் வைத்திருப்பதாகவும் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

# இந்தியக் கோதுமை ஈராக்கிற்கு

(புதுடில்லி)

இந்தியாவிலிருந்து ஈராமிற்கு எண்பதினாயிரதொன் கோதுமை ஏற்றுமதி செய்ய இருப்பதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன,

இந்தியாவின் இரு கூட்டுத்தாபனங்களுக்கு கோதுமை ஏற்றுமதிக்கான அனுமதிகள் ஈராக்கிலிருந்து கிடைத்ததாகவும் இருஸ்தாபனங்களும் கப்பல் மூலமாக தவணை முறையில் கோதுமையை அனுப்பிவைக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து-க)

# வாகன ஓட்டுநர்கள் ஆர்ப்பாட்டம்

(கமல்போன்)

ஆஸ்திரிய கனரக வாகன ஓட்டுநர்கள் மெல்போன் நகரிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தைச் சுற்றி முற்றுக்கையிட்டனர்.

அண்மையில் முன்னைய விலைகளிலும் பார்க்க மூன்றில் ஒருபங்கு விலை கூட்டிகதையடுத்தே ஆர்ப்பாட்டயாக வந்து முற்று கையிட்டனர்.

சுத்திகரிப்பு நிலையவேலைகள் சிறிது நேரம் ஸ்தம்பிதம் அடைந்தது.

வாகன ஓட்டிகளின் விலை குறைப்புக் கோரிக்கையை அரசு ஏற்க மறுத்து விட்டது. (து)

# புதிய கூட்டு இணைவில் இந்தியா பிரிட்டன்

## பிரி. அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவும் பிரித்தானியாவும் மாபெரும் கூட்டு முயற்சியில் இறங்க இருக்கின்றது.என்று இந்தியா வந்திருக்கும் பிரித்தானிய வெளியுறவு இணை அமைச்சர் பீட்டர் கென் தெரிவித்தார்.

இந்தக் கூட்டு முயற்சியில் இருநாடுகளுக்கிடையேயும் அறிவு,ஆற்றல்களைப் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்றும் அனமச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பிரித்தானியா தொலைத் தொடர்பில்வல்லமை படைத்திருக்கிறதென்றும் இந்தியா கொம்யூட்டர் துறையில் முன்னணியில் இருக்கிறது என்றும் இருநாடுகளும் இணைந்து கூட்டமைப்பொன்றை உருவாக்கவேண்டும் என்று பிரித்தானிய அமைச்சர் தெரிவித்தார்.

புதுடில்லிவந்திருக்கும் அமைச்சர் இந்திய அமைச்சர்களுடனும்அதிகாரிகளுடனும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறார்.

இதேவேளை இந்திய தொழில் நுட்பவியலார்களையும் குறிப்பாக கொம்யூட்டர் வல்லுநர்களை பிரிட்டனுக்கு வரும்படி பிரிட்டன் அமைச்சு அழைப்பு விடுத்துள்ளார்.

பிரித்தானியா செல்லும் கொம்பியூட்டர் பொறியியல் வல்லுநர்களுக்கு விசேட சலுகைகளை அவ்வரசுவழங்க முன்வந்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. (து)

# யுத்த நிறுத்தத்திற்கு வரவேற்பு

(ஸ்ரீநகர்)

றம்ழான் பண்டிகையை ஒட்டி ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை இந்தியா அறிவித்திருப்பதை காஷ்மீர் அனைத்துக் கட்சிகளின் சூரிஸ் மகாநாடு வரவேற்றிருக்கிறது.

அது மேலும் தெரிவிக்கையில், இந்த யுத்த நிறுத்தத்தின்போது பயனுள்ள பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டுமென்றும் அதில் தாம் கலந்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தையின்போது பாகிஸ்தானும் காஷ்மீரும் இந்தியாவும் இணைய வேண்டும் என்றும் தெரிவித்தது. (து)

# சீன யுவதிகள் கைது

(கொழும்பு)

அழகு ஒப்பனை விடுதிஎன்ற பெயரில் விபச்சார விடுதி நடத்திவந்த சீனத்துச் சீமாட்டியையும், அவருடன் இணைந்து செயற்பட்டுவந்த 6 சீன இளம் யுவதிகளையும் பம்பலப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர். (உ)

''இறந்த வெகுளியின் தீதே சிறந்த உவகைமகிழ்ச்சியின் சோர்வு'' - குறள்

## வலர்புரி

### சிறுவர்களின் உரிமைகள்

உலக நாடுகள் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் பல்வேறு சட்டவாக்கங்களை மேற்கொண்டு வருவதுடன், சிறுவர்களின் நலன்களைக் கவனிப்பதில் அக்கறை எடுக்குமாறும் நாடுகளிடையே வேண்டுகோள் விடுத்துள்ளன.

உலகில் யுத்தம் நடைபெறும் நாடுகளில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்களும், பெண்களும் என்பதை அறிக்கைகள் ஆதாரப்படுத்துகின்றன.

இவ்வாய்வு உண்மைகள் இலங்கைக்கும் பெரிதும் பொருந்தக்கூடியது.

இன யுத்த நடவடிக்கையில் உயிரிழந்த அங்கவீனமுள்ள தமிழ்ச் சிறுவர்களின் எண்ணிக்கை கொஞ்சமல்ல. நெடுந்தீவுக் குமுதினிப் படகு முதல் நேற்று முன் தினம் இடம் பெற்ற ஆனைக்கோட்டைச் சம்பவம் வரை தமிழ்ச்சிறுவர்களின் மரணப்பட்டியல் நீண்டு செல்வது வேதனைக்குரியது

உயிர்ப்பாதுகாப்பிற்காக கொழும்புத்துறையிலிருந்து இடம் பெயர்ந்து ஆனைக்கோட்டையிலிருந்த போது அன்ரன் நிக்ஷன் என்ற பத்து வயதுச் சிறுவன் கிரனேட் - துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிக்கிப் பரிதாபகரமாகப் பலியாகியுள்ளான். ஏழைக்குடும்பம், இடம் பெயர் முகாமில் ஏக்கத்துடன் எதிர்கால நம்பிக்கையில் வாழ்ந்த குடும்பம் இன்று புத்திர சோகத்தால் துவண்டு போயுள்ளது.

மாபிள் உருட்டி விளையாடும் மகிழ்வான வயதினரும் தமிழரெனில் பயங்கரவாதிகள் என பட்டம் சூட்டும் இம்மண்ணில் சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்படுமா என்பது கேள்விக்குறியே.

அதிலும் ஏழையெனில் இனிக்கேட்பார் யார். பணம் படைத்தவர் உயிரும், பரம ஏழையின் உயிரும் சமமெனக் கருதாத ஓர் சமூகம் நம்மண்ணில் உருவாகுமாயின்மானிடம் மரணிப்பதைத் தவிர்க்க முடியாது போய்விடும்.

உலகில் சிறுவர்களின் உரிமையைப் பாதுகாப்பதில் சர்வதேச அமைப்புக்கள் ஈடுபடும் போது இங்கு தமிழ்ச்சிறுவர்களின் உரிமைகள் அல்ல உயிரே பறிக்கப்படுகிறது. இதனை தட்டிக்கேட்க இங்குள்ள சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள் முன்வர வேண்டுமென்பதுடன் நிக்ஷனின் குடும்பம் ஏழ்மையைப் போக்கபரோபகாரிகள்முன்வரவேண்டும்.

# மரணித்துப்போன மனிதப்பண்புகளைமீட்பதற்கு அன்பு பிரவாகத்தை தரணி எங்கும் பரப்புவோம்



பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபாவின் 75வது பிறந்த தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது (ஆ-ர்)

செல்வி வாசுகி குணராசா

(ஆசிரியை)

இறை பக்தி பலமிழந்து அதர்மம் தலைதூக்கி, தர்மம் தலை கவிழ்ந்து நிற்கும் இக் கலியுகத்திலே எங்கள் மானிடப் பிறவியை மீண்டும் அறநெறியில் நம்பிக்கை கொண்டு சத்ய மார்க்கத்தில் வாழ்வதற்கான அடியை எடுத்துக் கொடுக்கும் உந்து சக்தியே இந்த மனித மேம்பாட்டுக் கல்வியாகும்.

இந்த மனித மேம்பாட்டுக் கல்வியானது இன்று நமக்கு ஏன் அவசியமாகின்றது? ஆம் இந்த மானிட சமூகமானது உலகளாவிய இறுக்கம், விரைவான தேவையற்ற வரையறையற்ற வளர்ச்சிப் போக்குக் காரணமாக ஒரு இயந்திரத்தனமான வாழ்வை நடைமுறைப்படுத்தி, எப்படியும் வாழலாம் என்ற கட்டுக்கோப்பற்ற வாழ்க்கை நடைமுறைப் படுத்தி வருகின்றது. இதன் காரணமாக நாம் இழந்து போனது நமது அழகான இனிமையான எளிமையான வாழ்க்கையைத்தான். சீர்குலைந்து சிதறிப் போன எமது வாழ்வில் நாளாந்த நடைமுறை பல ஒழுக்கப் பிறழ்வுகள் ஏற்பட்டன. இதுவே எமது மனிதம் மரணிக்கக் காரணமாகியது.

இத்தகைய நிலையில் நமது வாழ்வில் பல பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. இதிலே எமது கல்வியின் நோக்கம் திசைமாறியது. கல்வி ஒழுக்கத்தைவளர்ப்பதற்காகவன்றி பட்டம் பெறுவதற்காகவும், பதவிகளை அடைவதற்காகவும், போட்டி பொறாமைகளைத் தூண்டி விடுவனவுமாகவே அமைந்துவிட்டன. எனவே இங்கு கல்வியின் நோக்கம் திசைமாறியது இதனால் எமதுஉள்ளங்கள் குழம்பின. எம்முடைய சொல் தடுமாறியது செயல்கள் பாதை மாறின. ஒழுக்கம் சிதைவுற்றது, அன்பு அழிந்தது, இறை நம்பிக்கை தேய்ந்துபோனது, பண்பு, பணிவு, கலாசாரம், பழக்கவழக்கம், பண்பாடுகள் காணாமலே போய்விட்டன.

## மிருகமாக மாறும் மனிதன்

இவ்வாறு நமது சமூகம் மாறியமைக்கு எமது சூழலை, எமது யுத்த மேகம் சூழ்ந்த நாட்டினை, எமது இயலாமையை, வறுமையைத், துன்பத்தை, புரிந்துணர்வில்லாமையை, விரக்தி, கோபம், வெறுப்பு போன்ற பல காரணங்களைக் கூறலாம். இத்தகைய இருள் எம்மைச் சூழ்ந்துள்ள நிலையிலேயே மனிதன் மனிதனாக வாழாது மிருகமாக மாறிக் கொண்டிருக்கின்றான். இதற்கு பல சான்றுகளை நமது சமூகத்தின் மத்தியில் கண்கூடாகக் கண்டுகொண்டிருக்கின்றோம்.

அதிலே நமது சமூகத்தில் மிகவேகமாகப்பரவிக்கொண்டிருக்கும், மனிதத்துவத்தை மட்டுமல்ல மனிதனையே மிக வேகமாக சாகடிக்கும் 'எய்ட்ஸ்' நோய் ஒன்று, அடுத்து நம் மத்தியிலே ஆண்களால் மட்டுமல்ல தெய்வத்திற்கு சமமான இரக்கத்தின் அன்பின் ஆணிவேர்களாகிய பெண்களாலும் ''ராக்கிங்', என்ற பெயரில்! மிகக் கேவலமான கவலைக்கிடமான காரியங்களையும் செயற்படுத்துமளவிற்கு நமது சமூகமும் சீர்குலைந்துள்ளதுஎனில் இதன் அடிப்படைப் பிறழ்வு தான் என்ன? ஆமாம் இங்கும் கல்வியின் நோக்கம்திசை மாறி அதன் அடிப்படையே மறைந்து போனமையே காரணம் எனலாம்.

## உன்னத நிலை

எனவே இத்தகைய சீர்கேடான, பின்னடைவான நிலையை மாற்ற வேண்டும். இந்நிலை மாறவேண்டும். இல்லையேல் 21-ம்நூற்றாண்டில் ஒரு படு பயங்கரமான சமூக அழிவை எதிர்நோக்க வேண்டியவர்களாகி விடுவோம். இத்தகைய நிலையை மாற்றி நமது மனித சமுதாயத்தைச்சீர்படுத்தி மானுடத்தை மீண்டும் மிக உன்னத நிலைக்கு கொண்டு வருவதற்கே இந்த ஸ்ரீ சத்யசாயியின் மனித மேம்பாட்டுக் கல்வியின் அவசியம் நமது சமூகத்திற்கு இன்று ஒரு விருந்தாக்கப்படுகின்றது.

எனவே இந்த மனித மேம்பாட்டுக் கல்வியின் மிக முக்கியமான நோக்கம் யாதெனில் ''மனிதன் மனிதனாக வாழப்பழகுதலேயாகும்'' இவ்வாறு மனிதன் மனிதனாக வாழுவதற்கு தேவையானஅடிப்படைசக்தி 'அன்பு' தான். இத்தகைய அன்பினை வைத்துநோக்குவோமெனில், ஒரு பிள்ளையானது பிறக்கும் போது நல்ல பிள்ளையாகவே பிறக்கின்றது. இதையே கவிஞர் கண்ணதாசன் தனது பாடல் வரியில்

''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அது-நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே''

என்கிறார் ஆமாம் குழந்தை பிறந்தபின் வீட்டிலே பெற்ற அன்னை தன் குழந்தைக்கு நல்லது செய் கெட்டதைச் செய்யாதே எனக்கட்டளைஇடுகின்றாள். அவ்வாறே அப்பிள்ளை பாடசாலைக்குடும்பத்துட் சென்றதும் ஆசிரிய அன்னை தொடர்ந்து கட்டளை இடுகின்றாள். மேலும் சமூகத்தினுள் அவன் செல்லும் போது வைத்தியர், பாதுகாவலர், நீதிபதி போன்ற பலர் நல்லது, கெட்டது எனக் கட்டளையிடுகின்றனர். இந்தக் குழந்தை ஆனதுஇக்கட்டளை இடும் அன்னையர் முன்பு நல்லதைச் செய்கின்றது. கட்டளை இடுபவர் இல்லாத வேளையில் மேய்ப்பன் இல்லாத மந்தை போன்று மாறி விடுகின்றது. இத்தகைய நிலையை இந்த (மனித மேம்பாட்டுக் கல்வி) அன்பினால் மாற்ற முடியும். அதாவது குழந்தையானவன் உள்ளார்ந்தமாக சிந்தித்து செயற்பட வைக்கின்றது.

அதாவது குழந்தையானது ஆத்மார்த்தமாக உணர்ந்து அன்பினாலே கெட்டதைத் தவிர்த்து மற்றவர்கட்குதீமை பயப்பதைத் தவிர்த்து உணர்ந்து செயற்படத் தூண்டுதலே இந்த மனித மேம்பாட்டுக் கல்வியின் அடிப்படை உண்மையாகும்.

## சமூக ஒழுங்கு

இந்த மனித மேம்பாட்டுக் கல்வியின்,அடிப்படையே அன்பினை வெளிப்படுத்தி எதனையும் உள்ளத்தினாலே உணர்ந்து செயற்பட வைத்தலேயாகும். இதன் முக்கியமான சொற்றொடரே சக்தி ஒழுங்கு, அன்பு எனப்படுகிறது. இந்தப் பிரபஞ்சத்திலுள்ள கோள்கள் எவ்வாறு உலகைச் சுற்றி வருகின்றன? இவைஈர்ப்பு சக்தியினால் ஒரு ஒழுங்கில் சுற்றி வருகின்றன. இந்த ஒழுங்கு மாறுபட்டால் கோள்கள் யாவும் மோதுண்டு பெரும் அழிவினை ஏற்படுத்தும். ஆனால் அப்படி நிகழாமல் இந்தப் பிரபஞ்சம்தெய்வ சக்தியினால் ஒரு ஒழுங்கில் சுற்றி வருகின்றது அவ்வாறே நமது உலகில் மனிதர்களை சமூகங்களைக் கட்டுப்படுத்த சமூக அமைப்புகள்,நிறுவனங்கள், ஐ. நா அமைப்புக்கள் போன்றன ஒழுங்குடன் இயங்கவைக்கின்றன.

அவ்வாற யின் நமதுகுடும்பமும் நாமும் எவ்வாறு ஒழுங்கைக் கடைப்பிடிக்கலாம்? அதற்குத் தேவையான சக்தி தான் என்ன! ''அன்பு'' ஆம் இந்த அன்புதான் எங்களை குடும்பத்தில் எந்தவொரு பிரச்சினையும் தோன்றவிடாமல் தடுக்கிறது எம்மை சுமுகமாகஇயங்கவைக்கிறது. எமது உறவுகளைவளர்க்கிறது எமது உள்ளத்தைத் தூய்மையாக்குகிறது. இத்தகைய மேலான அன்புதான் எங்கள் மனிதசமூகத்தைபின்னிப் பிணைந்து கட்டியெழுப்பகின்றது.

இத்தகைய அன்பு தான் மனித மேம்பாடுகளைவளர்க்கும் அடிப்படை உந்து சக்தி. எமது மனிதமேம்பாடுகளான சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை [அன்பு] அகிம்சை ஆகிய அனைத்தும் இவ் அன்பின் வளர்ச்சிகளே.

நாம் அன்பு கொண்டுஅதாவது பரிபூரணமான அன்பைக் கொண்டு நமது நாளாந்த செயல்களில் ஈடுபடுவோம் எனில் அதுவே எமது மேம்பட்ட நிலை.நாம் நல்ல சிந்தனைகளை நாளாந்தம்வளர்த்துக் கொண்டால் மற்றவர்களையும் நல்லவர்களாக மாற்றலாம். நாம் யேசுநாதரை, புத்தபகவானை,சுவாமி விவேகானந்தரை,காந்தி அடிகளை அன்னை திரேசாவை இன்றும் நினைவு கூறுகிறோம் எனில் அங்கு அவர்கள மற்றவர்கள் மேல் செலுத்திய அன்பு தான் காரணம். அவர்களை அவ்வாறு மாற்றிய மிகப் பெரிய மனவலிமையின் மிகப் பெரிய சக்தி அன்பு தான். மற்றவர் மேல் அன்பு செலுத்துவோமனில் நாம் சகலதையும் பெற்றுக் கொள்ளலாம்.

''எல்லோரிலும் அன்புவை அவர்கள் அன்பு செலுத்தவில்லையே என ஏங்காதே'' என்கிறார் காந்தி அடிகள் எனவே எம்மில் இருந்து பிரவாகிக்கும் அன்பின் மூலம் நமது சமூகத்திற்கும் நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்ல சொல், சிந்தனை செயல் போன்றவற்றை வழங்குவதற்கு முடியும்.எனவே மனிதமேம்பாட்டின் உன்னத நிலையினை அன்பின் மூலம் அடைய முடியும்.

பகவானின் ஒழுக்கக் கோவை ஒன்பது

1. தினமும் தியானம் ,ஜெபம்
2 வாரம் ஒருமுறை குடும்ப பஜனை
3. பாலவிகாஸ் வகுப்பில் குழந்தைகளை பங்குபற்றச் செய்தல்
4 சாயிசேவா நிலைய சேவைப் பணிகளில் பங்கு கொள்ள வேண்டும்
5. நிலையத்தின் பஜனை, நகரசங்கீர்த்தனங்களில் பங்குபெறல் வேண்டும்
6. தினமும் சாயி இலக்கியங்களை ஆழ்ந்து படித்தல்
7. ஒவ்வொருவரிடமும் மெதுவாகவும், பணிவாகவும் பேச வேண்டும்
8. மற்றவர்களைப் பற்றிக் கெடுதலாக பேசுவதைத் தவிர்க்க வேண்டும்
9. ஆசைகளை கட்டுப்படுத்தல்

'ஜெய் சாயி ராம்'

## சடலங்களிலிருந்து கண்கள் மாயமாக மறைவு உறவினர் பரிதவிப்பு

(ஈச்சமோட்டை)

மன்னார் வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக செல்வோரில் பெரும் பாலானோர்மரணமடைவதாகவும் அவ்வாறானோரின் சடலங்களிலிருந்து கண்கள் மாயமாக மறைந்து விடுவதாகவும் சம்பந்தப்பட்டோர் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் மன்னாரிலிருந்து பெரும்பாலான நோயாளிகள் அனுராதபுரம் வைத்திய சாலைக்குச்செல்வதற்கு பெரிதும் அச்சம் தெரிவித்துள்ளனர்

மேற்படி சடலங்களிலிருந்து உறவினர்களின் சம்மதத்தைப் பெறாமலேயே கண்கள் அப்புறப்படுத்தப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ச-க-59)

# மட்டக்களப்பு இராணுவ காவலரண் வெள்ளத்தில்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் பெருமழை காரணமாக இராணுவக் காவல் அரண்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவலாகப்பல பொலிஸ் இராணுவக் காவல் அரண்கள் வெள்ளத்தில்மூழ்கிஇருப்பதினால் சோதனைநடவடிக்கைகள் பெருமளவு தளர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# கஸ்தூரியார் வீதிச்சம்பவம் சந்தேக நபர்களுக்கு பிணை அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் கஸ்தூரியார் வீதியில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த ஐந்து பேரையும் யாழ். நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

இரண்டாம்குறுக்குத்தெரு, பருத்தித்துறையைச் சேர்ந்த சந்நசாமிசெல்வராசா (வயது 25), சண்முகம் சிவலிங்கராசா (வயது52)கொக்குவில், பொன்னையா சிவபாதம்(52) நல்லூர், ஜெகதீசன் ஜெகமோகன் (வயது25)புலோலி, இசேக்குமுத்து அருணாச்சலம் (வயது 42) புலோலி ஆகியோரே 25 000 ரூபா சரீரப்பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸாரை நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான உத்தரவிட்டுள்ளார்.

எனினும் பிரஸ்தாப பொலிஸார் சம்பவத்தின் போது காயமடைந்ததால் அவரது உடல் நிலை சீரடைந்ததும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 30 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகவுள்ளாரெனவும் தெரியவருகிறது. (ஸ்ரீ-12)

## விடுதலைப்புலிகள்

ஆர்ப்பாட்டப் பேரணி இடம் பெற்றுள்ளது.

சிஹலஉறுமயக் கட்சியின் செயலாளர் திலக்கருணாரத்தின தலைமையில் நடைபெற்ற இப் பேரணியில் சுமார் 200க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு பிரித்தானிய அரசுக் எதிரான கோஷங்களை எழுப்பினர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் புத்தபிக்குகளும் கலந்து கொண்டனர். பொலிஸார் தலையிட்டு ஆர்ப்பாட்டத்தை இடைநிறுத்தியதாக தெரியவருகிறது. [ஸ்ரீ-5]

## ஆர்ப்பாட்ட

ஊர்வலத்தின போது எடுத்துச் செல்லப்பட்ட சுலோகங்கள் வருமாறு.

★ நிமலராஜன் படுகொலையா வடபகுதியில் புனரமைப்பு.

★ கோனா ஏந்தும்கைகளில் ஆயுதம ஏந்த வைக்காதே!

★ தமிழ்க கட்சிகளிடம் இருந்து ஆயுதங்களைக்களை.

★ எம்.பி பதவிக்காய் தமிழரின மானத்தை விற்காதே.

★ பண்டாரவளை- நிமலராஜன் படுகொலைகள் உடன விசாரணை செய்து நடவடிக்கை எடுத்து குற்றவாளியை சட்டத்தின் முன் நிறுத்து

★ பத்திரிகையாளர் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். மாணவர்கள் நாம்குரல் கொடுப்போம்.

★ கட்டற்றொழிலில் உள்ள சட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும். (ம-12-59)

## பிரதி

வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வழங்கிக் கொண்டிருக்கும் போது திடீரென சுகயீனம் ஏற்பட்டு அந்த அம்புலன்ஸ் வண்டியில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அங்கு மரணமானார்.

கடந்த 94 மற்றும் இவ்வருட பொதுத் தேர்தல்களில் இவர் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகி பொது மக்களுக்கான பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னர் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக வாணிப உணவுத்துறை பிரதி அமைச்சராக விளங்கியவர். [உ]

## தமிழரின்

யோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் போது விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக கருதி தமிழ் மக்களின் அபலத்தை போக்குவதற்கு உடனடியாக யுத்த நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை காங்கிரஸ் எம்.பி அ.விநாயகமூர்த்தி பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சரிடம் முன்வைத்தார். அதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவளித்தது.

எனினும் ஈ.பி.டி.பி அமைப்பைச் சேர்ந்த கலாநிதி விக்னேஸ்வரன் விடுதலைப்புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ள எமது கட்சிக்கு சம்மதமில்லையெனவும், சகல தமிழ் கட்சிகளுடனும் பேசவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். [வ[

## அமெரிக்க

டான, ஆகியநாடுகளுக்கும் செல்லவுள்ளார்.

நான்காவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இவர் நோர்வேயின் சமாதான முயற்சி குறித்து அரசியல் கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# அமைச்சர்கள், கட்சிபிரதிநிதிகளை பிரிட்டிஷ் அமைச்சர் சந்தித்தார்!

[கொழும்பு]

கொழும்புக்கு வருகைதந்திருந்த பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெயின் அமைச்சர் பீரிஸ், வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஆகியோரை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அதேவேளை தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் குழு ஆகியோரையும் அமைச்சர் சந்தித்துப் பேசியுள்ளார், இக்குழுவில் அசைச்சர்களான சரத்அமுனுகம, ரவூப்ஹக்கீம், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான பி.பி.தேவராஜ், ருக்மன்சேனநாயக்கா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆர்.சம்பந்தன், தேசிய சமாதான பேரவை உறுப்பினர் டிரால்டி பேணினற் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்:

இக்குழுவினரே விடுதலைப் புலிகளுக்குக்கும் அரசுக்கும் இடையே நடைபெறவுள்ள பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வார்களென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். [வ]

## இலங்கை

மவற்றிபெற முடியாது. இந்நிலையில் யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினையை ஒரு போதும் தீர்க்கமுடியாது, பேச்சுவார்த்தைமூலமே பிரச்சினையை தீர்க்கலாமென்பது வரலாற்று உண்மை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுயநிர்ணய கோட்பாட்டினை ஐரோப்பிய சமூகம் ஆதரிக்கின்றது. ஆனால் வெறுமனே பிரிவினைவாதப் போக்கை ஐரோப்பிய நாடுகள் ஆதரிக்கவில்லை என்றும் நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு பிரிட்டிஷ் ஆதரவு வழங்குமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பழைய பகைமைகளை மறந்து இருதரப்பும் சுமுகமான சூழ்நிலையில் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைமூலம் பிரச்சினையைத் தீர்க்க முன்வரவேண்டுமென்றும் அவர் இருதரப்பினையும் கேட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் அரசியல் வாதிகள், பத்திரிகையாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (வ)

## அனுமதி...

டையை ஒரு வாரத்துக்குள் பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் பாடசாலை பரீட்சைப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுளளது.

அத்துடன் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதியட்டைகள் நாளை மறுதினம் தபாலில் சேர்க்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## புலிகள்

வித்துள்ளனர். உயிரிழந்தோர் விபரம் வருமாறு.

- கப்டன ராகவன் [நாகேஸ்வரன் பிரகர்ஷ்] யாழ்ப்பாணம்
- பாலினி [இராசரத்தினம் பிரதீபா] அக்கராயன்
- சாமந்தி [முருகன் பிரியா] துணுக்காய்
- கிரியரசி [மார்க்கண்டு விக்கினேஸ்வரன்] யாழ்ப்பாணம்
- வான்மதி [சதாசிவம் றோகினா] வவுனியா [ம]

# உயிலங்குள மோதலில் 4படையினர் காயம்

(மன்னார்)

உயிலங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் படைத்தரப்பில் நால்வர் காயமடைந்துள்ளதாக விஷேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை படையினரின் பதில் தாக்குதலில் புலிகள் தரப்பில் மூவர் உயிரிழந்துள்ளதாகவும், ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் விஷேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் அறிவித்துள்ளது. (ஸ்ரீ)

# விமானசேவை இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்-கொழும்பு பயணிகள் விமான சேவை இன்று இடம் பெறுமென யாழ்.சிவில் நிர்வாக காரியாலயம் அறிவித்துள்ளது.

இதேவேளை 'றான்' அலுவலகத்தில் இன்று பயண அனுமதிகள் வழங்கப்படமாட்டாதெனவும், நாளை முதல் பயண அனுமதிகள் வழங்கப்படுமெனவும் அதன் இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் 511 ஆவது படைப்பிரிவுக்குட்பட்டவர்கள் தமது பாதுகாப்பு அனுமதிகளை இன்று காலையில் பார்வையிட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## ஜனாதிபதியுடன் இன்று சந்திப்பு

(கொழும்பு)

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் பீற்றர் ஹெயின் இன்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவையும், ரட்ணசிறி விக்கிரமநாயக்காவையும், எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேசவுள்ளார். (வ)

## யாழ்

சுலோகங்களைத் தாங்கியவாறும் சென்றனர்.

கச்சேரியைச்சென்றடைந்த ஊர்வலத்தினர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கக் கூடியதான மகஜர் ஒன்றைக் கையளித்தனர். இறுதியாகக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றறு.

இக் கூட்டத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்உரையாற்றும் போது பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு ஆதரவாக கையுயர்த்தி நிற்பவர்கள் எப்படி தமிழர்களின் பிரதிநிதிகளாக முடியும் என்று கேள்வி எழுப்பினார்.

நேற்று நடைபெற்ற ஊர்வலத்தின் போதுஅதில்கலந்து கொண்ட மாணவர்களை பொலிஸார் வீடியோப்படம் எடுத்தனர்.

நேற்றைய ஊர்வலத்தை அடுத்து பல்கலைக்கழக விரிவுரைகள் யாவும் தடைப்பட்டிருந்தன. யாழ். செயலக வேலைகளும் சற்று நேரம் ஸ்தம்பிதம்அடைந்திருந்தது.

இதே வேளை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடமும்மகஜர் கையளித்தனர். (ம-12-43-59-77-114)

# ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வடக்கைச்சேர்ந்த சின்னத்தம்பு ஈஸ்வரன் (வயது 49) கடந்த 20 ஆம் திகதி மாலை 5 மணிக்கு வீட்டில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி இரவு நேரக்காவலாளியான இவர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக இராணுவத்தினரால் பற்றுச்சீட்டும் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-12)

## 3500 மாலை...

கடமையாற்றிய கிருஷ்ண பிள்ளை தனது 60ஆவது வயதில் கடந்தவாரம் ஓய்வுபெற்றார்.

அதையொட்டி நடந்த பிரிவுபசாரத்தின்போதே இம் மாலையணிவிப்பு நிகழ்வு இடம்பெற்றது,

கல்லூரியதிபர் ஸ்ரீபன் மத்யூவின் தலைமையில் இடம் பெற்ற இப்பிரிவுபசாரத்தின் போது பிரதியதிபரை வழியனுப்புவதற்கு முன்னதாக அவருக்கு அணிவிக்கப்பட்ட மூவாயிரத்து ஐந்நூறு மாலைகளும் வாகனம் ஒன்றின் மூலம் அவரின் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் இவ்வளவு தொகை மாலை அணிவிக்கப்பட்டமை இதுவே முதல்தடவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)


## அறிவித்தல்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

**தரம் 6க்கான அனுமதி 2001**

மேற்படி விண்ணப்பங்களை அடுத்தமாதம் 15-ம் திகதிக்கு முன்பு பாடசாலை அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

அதிபர்
ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.

(இ-1057)



## ஸ்ரீசெல்வா

(யாழ்ப்பாணம்)

சத்தியராஜ்
அருண்பாண்டியன்
றோஜா,மணிவண்ணன்
நடிப்பில்
**புரட்சிக்காரன்**
நேரடி CD
10.30,2.30 (ப:நேரம்)
[இ-688]


## பிரிவுத்துயர் பகிர்வு

**அருணாசலம் ஆறுமுகம் (ஜே பி)**

(முன்னாள் உப அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை)

சாவகச்சேரி வடக்கு தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்த அருணாசலம் ஆறுமுகம் நேற்று காலமானார் அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று பி.பகல் 3 மணிக்கு நடைபெறும்.

தகவல் ஜெபாலன், ஜெயக்குமார்
மகன்மார்
கப்பூது, கரவெட்டி

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.